ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2401/24 - 2024 සැප්තැම්බර් මස 12 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.09.12
2401/24 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

**அறிவித்தல்**

**தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபை**

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (136 ஆம் அத்தியாயமாகிய) 30 ஆம் பிரிவின் கீழ், தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு இவ் அறிவித்தலின் அகத்தேயுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான தீர்மானங்கள் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 29(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.

இந்த முடிபு 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.

**ஆர். பி. ஏ. விமலவீர,**
செயலாளர்,
தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு.

"மெஹெவர பியெச",
தொழில் திணைக்களம்,
கொழும்பு 05,
2024, செத்தெம்பர் 12.

1A - G 42688 — 54 (2024/09)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

### அட்டவணை

தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1945 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதிய 9441 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் உள்ள அட்டவணையில் உள்ளவாறு பிரசுரிக்கப்பட்டதுடன், காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டனவுமான, 2021, மாச்சு மாதம் 05 ஆந் திகதிய 2217/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் இறுதியாக வேறுபடுத்தப்பட்டதுமான முடிபுகள் அட்டவணையின் II ஆம் பகுதிக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படல் வேண்டும்.

### பகுதி II

### நாளாந்த நேர வேலைக்கான ஆகக் குறைந்த சம்பள விகிதம்

| | | |
|---|---|---|
| I. | ஆகக் குறைந்த நாளாந்தச் சம்பளம்<br>(இத்தொகை நாளாந்த வரவு செலவுத் திட்ட நிவாரணப்படியை உள்ளடக்குகின்றது என்பதுடன் ஊ. சே. நி. மற்றும் ஊ. ந. நி. கொடுப்பனவிற்கும் ஏற்புடையதாகும்.) | ரூபா 1350.00 |
| II. | ஒவ்வொரு மேலதிக கிலோ கிராமிற்கான விகிதம் | ரூபா 50.00 |

இந்த முடிவுகளை 2024, செத்தெம்பர் 10 ஆந் திகதியிலிருந்து தொடங்கி மூன்று வருட காலத்திற்கு அமுல்படுத்துவதென சம்பளச் சபை தீர்மானித்துள்ளது.

EOG 09-0097/1

---

### சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

### அறிவித்தல்

### இறப்பர் பயிரிடல் மற்றும் பச்சை இறப்பர் பதனிடல் தொழிலுக்கான சம்பளச் சபை

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (136 ஆம் அத்தியாயமாகிய) 30 ஆம் பிரிவின் கீழ், இறப்பர் பயிரிடல் மற்றும் பச்சை இறப்பர் பதனிடல் தொழிலுக்கான சம்பளச்சபையினால் ஆக்கப்பட்டு இவ் அறிவித்தலின் அகத்தேயுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான தீர்மானங்கள் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென சம்பளச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 29(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.

இந்த முடிபு 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.

**ஆர். பி. ஏ. விமலவீர,**
செயலாளர்,
தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு.

"மெஹெவர பியெச",
தொழில் திணைக்களம்,
கொழும்பு 05,
2024, செத்தெம்பர் 12.

### அட்டவணை

இறப்பர் பயிரிடல் மற்றும் பச்சை இறப்பர் பதனிடல் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1949 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆந் திகதிய 10047 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் உள்ள அட்டவணையில் உள்ளவாறு பிரசுரிக்கப்பட்டதுடன், காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டனவும், 2021, மாச்சு 05 ஆந் திகதிய 2217/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் இறுதியாக வேறுபடுத்தப்பட்டதுமான முடிபுகள் அட்டவணையின் II ஆம் பகுதிக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படல் வேண்டும்.

## பகுதி II

### நாளாந்த நேர வேலைக்கான ஆகக் குறைந்த சம்பள விகிதம்

| | | |
|---|---|---|
| I. | *ஆகக் குறைந்த நாளாந்தச் சம்பளம்*<br>*(இத்தொகை நாளாந்த வரவு செலவுத் திட்ட நிவாரணப்படியை உள்ளடக்குகின்றது என்பதுடன் ஊ. சே. நி. மற்றும் ஊ. ந. நி. கொடுப்பனவிற்கும் ஏற்புடையதாகும்.)* | *ரூபா 1350.00* |
| II. | *ஒவ்வொரு மேலதிக கிலோ கிராமிற்கான விகிதம்* | *ரூபா 50.00* |

*இந்த முடிவுகளை 2024, செத்தெம்பர் 10 ஆந் திகதியிலிருந்து தொடங்கி மூன்று வருட காலத்திற்கு அமுல்படுத்துவதென சம்பளச் சபை தீர்மானித்துள்ளது.*

EOG *09-0097/2*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*